**அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகம் American Tamil Academy**

# நிலை 1 -
# ஆசிரியர் கையேடு

## Nilai 1 - Hand Book

திருமதி. மேகலை எழிலரசன்

## அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

## American Tamil Academy

# நிலை-I பாடநூல்

## பள்ளி ஆண்டு : 2013-14

www.americantamilacademy.org / www.amtaac.org
Email: support@amtaac.org

# *நிலை 1 பாடத்திட்டம்*

தமிழ் மொழியின் அறிமுக நிலை

**வயது வரம்பு:** 5 வயது முதல் 6 வயது வரை.

**தகுதி: அடிப்படைத் தகுதி எதுவும் தேவையில்லை**

**பாடத்திட்டம்:**

- உயிர் மற்றும் மெய் எழுத்துக்களை அறிதல், அடையாளம் காணல்.
- எளிய முறை எழுத்துப் பயிற்சி.
- பாடல்கள், கதைகள், ஆத்திசூடி, படங்களைப் பார்த்து அதன் பெயர்களைக் கூறல்.
- எளிய வாக்கியங்களை உச்சரிக்கப் பயிற்சி.

**நோக்கம்:** இந்த நிலையின் முடிவில் உயிர், மெய் எழுத்துக்களுடன், சில கதைகள், பாடல்கள் மற்றும் சுமார் 100 எளிய தமிழ் சொற்களைக் கற்றிருத்தல். வாக்கியங்களைத் தெளிவாக உச்சரித்தல்.

## கல்வியாண்டில் பள்ளியில் பின்பற்ற வேண்டியவை

- அமெரிக்காவில் நடந்துவரும் பல தமிழ்ப்பள்ளிகளின் உதவியுடன் பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- மொத்தம் 25 பாடங்கள் மற்றும் அதற்கான பயிற்சிகள்.

- மூன்று பருவங்களாகத் தேர்வு நடத்தப்படும்.

- வகுப்பறைக்கு வருவது, வீட்டுப்பாடங்கள் நிறைவு செய்வது மற்றும் மூன்று பருவத் தேர்வுகளில் பெறும் மதிப்பெண்கள், ஆகிய அனைத்தையும் கொண்டு ஆண்டு இறுதியில் மாணவர்களின் தமிழறிவு மதிப்பிடப்படும்.

- 25 வகுப்பறைப் பாடங்கள் (தலா 2 மணி நேரம்) + 3 பருவ தேர்வுகள் = மொத்தம் 28 வகுப்புகள்

- 2 மணி நேர வகுப்புகள் கற்பிக்க பரிந்துரைக்கப்படுகிறது.

## கல்வியாண்டில் வகுப்பில் பின்பற்ற வேண்டியவை

2 மணி நேர கால அட்டவணை (முழு நேரமும் தமிழில் உரையாடல்).

- தமிழ்த்தாய் வாழ்த்து – 5 நிமிடம்

- தமிழில் உரையாடல், கடந்த வாரம் வீட்டில், பள்ளியில் நடந்தது - 15 நிமிடங்கள்
- சென்ற வகுப்பில் நடத்திய பாடத்தை நினைவுபடுத்தல் 10 நிமிடங்கள்
- பாடத்திட்டப்படி எழுத்துக்கள், படங்கள், பாடல்கள், கதை - 35 நிமிடங்கள்
- சிறுதீனி இடைவேளை - 10 நிமிடங்கள்
- பாடத்திட்டப்படி எழுத்துக்கள், படங்கள், பாடல்கள், கதை - 30 நிமிடங்கள்

## கல்வியாண்டில் வீட்டில் பின்பற்ற வேண்டியவை:

தினமும் 30 நிமிடங்கள் தமிழ் பாடங்களைப் படிக்க வேண்டும்.

கடந்த வாரம் பள்ளியில் படித்த பாடங்களைப் பற்றி தமிழில் உரையாடவும்.

வரைதல் மற்றும் எழுத்துப்பயிற்சிக்கு உதவி செய்யவும்.

பொது அறிவு - கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் பற்றி தமிழில் உரையாடவும்.

படங்களைப் பார்த்து கதையை தமிழில் கூற பயிற்சி செய்யவும்.

பாடல்களை மனப்பாடம் செய்யவும்.

ஏதேனும் பொது தலைப்பைக் குறித்து கலந்துரையாடவும்.

திரைப்படங்கள், பாடல்கள், சிறு உரையாடல் முதலிய தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களை பயன்படுத்தலாம்.

<u>ஆசிரியர் குறிப்பு</u>

⇒ மாணாக்கர்கள், வகுப்பில் தமிழில் அதிகம் பேசும்படி வகுப்பு அமைய வேண்டும்.

⇒ மாணாக்கர்களை ஒவ்வொரு வகுப்பிலும், சென்ற வகுப்பில் நடத்திய பாடத்துடன் தொடர்புடைய ஒரு பொருளை வீட்டிலிருந்து எடுத்துவந்து இரண்டு சொற்றொடர்கள் தமிழில் அது பற்றி பேசச் சொல்லலாம்.

⇒ முதல் நிலை பயிற்சிப் புத்தகங்களில் உள்ள வீட்டுப்பாடங்களைச் செய்ய பெற்றோர் உதவி தேவை. ஒரு சில பயிற்சிகள் மாணாக்கர்கள் தாமாகவே செய்யக்கூடிவையாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

⇒ இந்த நிலையின் முடிவில் உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், பாடல்கள் மற்றும் கதைகளுடன் சுமார் 100 எளிய தமிழ்ச் சொற்கள் தெரிந்திருக்க வேண்டும்.

| பயிற்சிகள் | இனம் காணல் | எழுத்து ஒலியை மனப்பாடம் செய் | பொருளை தெரிந்து கொள் | எழுதிப் பழகு | தமிழில் சொல்லிப் பழகவும் | மனப்பாடம் செய் |
|---|---|---|---|---|---|---|
| எழுத்துகள் | X | X | | X | | X |
| படம் பார்த்து பெயர் சொல் | X | | X | | | |
| எழுதும் விதம் | | | | X | | |
| செயல்பாடுகள், பழங்கள், காய்கள் ..... | X | | X | | | |
| தெரிந்து கொள்வோம் | | | X | | | |
| ஆத்திசூடி | | | X | | | X |
| கதைகள் | | | X | | X | |
| பாடல்கள் | | | X | | | X |

# பொருளடக்கம்

* பாடம் - 1 ---------------------------------------- 7

அ, ஆ, வெள்ளை முயல், என் பொம்மை, செயல்பாடுகள், தெரிந்துகொள்வோம்

* பாடம் - 2 ---------------------------------------- 11

இ, ஈ, பேராசை கொண்ட நாய், என் குடும்பம்

* பாடம் - 3 ---------------------------------------- 15

உ, ஊ, படம் பார்த்துப் பெயர் சொல், பழங்கள், ஆத்திச்சூடி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 4 ---------------------------------------- 20

அ - ஊ சுழித்தல், யானை வருது, செல்லப் பிராணிகள், தெரிந்துகொள்வோம்

* பாடம் - 5 ---------------------------------------- 24

எ, ஏ, கரடியும் நண்பர்களும், காய்கறிகள்

* பாடம் - 6 ---------------------------------------- 28

ஐ, ஒ, படம் பார்த்துப் பெயர் சொல், காட்டு விலங்குகள், ஆத்திச்சூடி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 7 ---------------------------------------- 33

ஓ - ஃ நாய்க்குட்டி, பச்சைக்கிளி, பள்ளி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 8 ---------------------------------------- 38

எ - ஃ சுழித்தல், பொன் முட்டை இட்ட வாத்து, அடையாளம் கண்டு பெயர் சொல், தெரிந்துகொள்வோம்

* பாடம் - 9 ---------------------------------------- 42

உயிர் எழுத்துகள் மீள் பார்வை, பறவைகள், ஆத்திச்சூடி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 10 ---------------------------------------- 46

க், ங், ச், அ, ஆ பாட்டு, ரொட்டி ரொட்டியாம், பயணம்

* பாடம் - 11 ---------------------------------------- 50

ஞ், ட், ண், பூனைக்கு மணி கட்டுவது யார்? மரங்கள்

* பாடம் - 12 ---------------------------------------- 54

த், ந், ப், நல்ல குணங்கள், வாகனங்கள், ஆத்திச்சூடி

* பாடம் - 13 ---------- 59

ம், ய் ர், மியாவ், மியாவ் பூனையார், கப்பல், பண்ணை விலங்குகள்

* பாடம் - 14 ---------- 63

ல், வ், ழ், ஆடும் நரியும், நிறங்கள், தெரிந்துகொள்வோம்

* பாடம் - 15 ---------- 67

ள், ற், ன், விளையாட்டு, படம் பார்த்துப் பெயர் சொல், ஆத்திச்சூடி

* பாடம் - 16 ---------- 72

க் - ம் சுழித்தல், ஓடி விளையாடு பாப்பா, நீர்நிலைகள், தெரிந்துகொள்வோம்

* பாடம் - 17 ---------- 76

ய் - ன், சுழித்தல், சிங்கமும் பசுக்களும், பூச்சிகள்

* பாடம் - 18 ---------- 80

மெய் எழுத்துகள் மீள் பார்வை, சுழித்தல், எண்கள், படம் பார்த்துப் பெயர் சொல், ஆத்திச்சூடி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 19 ---------- 85

உயிர் எழுத்துகள் மீள் பார்வை, ஆயுத எழுத்து, அம்மா! அம்மா!, குரங்கு, ஆத்திச்சூடி, தெரிந்துகொள்வோம்

* பாடம் - 20 ---------- 89

க்-ம், சுழித்தல், உதவி செய், வார நாட்கள், பூக்கள்

* பாடம் - 21 ---------- 94

ய்-ன், சுழித்தல், நரியும் கொக்கும், படம் பார்த்துப் பெயர் சொல், ஆத்திச்சூடி மீள் பார்வை

* பாடம் - 22 ---------- 99

மெய் எழுத்துகள் மீள் பார்வை, சுழித்தல், எண்கள் பாட்டு

* பாடம் - 23 ---------- 102

சுவைகள், எந்தச் சுவை பிடிக்குது, உடலின் பாகங்கள்

* பாடம் - 24 ---------- 105

பாடல்கள் அனைத்தும் மீள் பார்வை, திசைகள், தப்பிச் செல்ல ஒரு வழி

* பாடம் - 25 ---------- 110

வைகறை எழு, ஆத்திச்சூடி மீள் பார்வை, கதைகள் அனைத்தும் மீள் பார்வை

## நிலை 1 தேர்வு மற்றும் திறனாய்வு முறை

நிலை 1 ல் தேர்வு மற்றும் திறனாய்வு, அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகத்தின் கோட்பாடுகளுக்கு உட்பட்டது.

மற்ற நிலையைப் போலவே மூன்றுப் பருவத் தேர்வுகள் நடத்தப்படுகின்றது.

வினாத்தாள், வாய் மொழித் தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வு என்ற இரண்டு பிரிவாக, மொத்தம் 45 நிமிடங்கள், நூறு மதிப்பெண்களுக்கு நடத்தப்படும்.

முதல் பருவத் தேர்வு ஒன்று முதல் ஒன்பது பாடங்கள், பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் இருந்து கேட்கப்படும்.

இரண்டாம் பருவத் தேர்வு பத்து முதல் பதினேழாம் பாடம் வரையுள்ள அனைத்துப் பாடங்களும் 80% (பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ளவை) மற்றும் ஒன்று முதல் ஒன்பது பாடங்கள் (20%), பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பாடல்கள் மற்றும் கதைகளை தவிர அனைத்து பாடங்களில் இருந்தும் கேட்கப்படும்.

மூன்றாம் பருவத் தேர்வு பதினெட்டு முதல் இருபத்தி ஐந்தாம் பாடம் வரையுள்ள அனைத்து பாடங்களும் 60% (பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்திலுள்ளவை) மற்றும் ஒன்று முதல் பதினெழாம் பாடங்கள் (40%), பாடநூல் மற்றும் பயிற்சி நூலில் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பாடல்கள் மற்றும் கதைகளை தவிர அனைத்து பாடங்களில் இருந்து கேட்கப்படும்.

9, 17 மற்றும் 25ஆம் பாடத்தின் இறுதியில், ஒவ்வொரு பருவத் தேர்வுகள் நடத்த அமெரிக்கத் தமிழ் கல்விக்கழகத்தால் பரித்துரைக்கப்படுகிறது.

நிலை 1 பாடப்பகுதியை 6 பிரிவுகளாக பிரிக்கலாம்:

1. எழுத்துகளைக் கற்றல், எழுத்துப்பயிற்சி
2. பாடல்கள், ஆத்திசூடி
3. கதைகள்

எழுத்துகளைக் கற்றல், எழுத்துப்பயிற்சி:


பேனா அல்லது markers உதவியுடன் எழுத்துக்களை தனியாக ஒரு குறிப்பேடிலோ அல்லது ஒரு காகிதத்துலோ அல்லது எழுத்துப்பயிற்சியேட்டிலோ எழுதி, பின் அதன் மீது எழுத பயிற்சிக் கொடுக்கலாம்.

அந்த வகுப்பிற்குறிய எழுத்தை மட்டுமின்றி, முந்தைய வகுப்பில் படித்த எழுத்துகளையும் சேர்த்துப் பயிற்சிக் கொடுக்கலாம்.

அந்த வார எழுத்தைக் கற்பிக்கும் முன் முந்தைய வகுப்பில் படித்த எழுத்துகளை உச்சரித்து எழுத பயிற்சிக் கொடுக்கலாம்.

இவ்வாறு செய்யும் நிலையில் மாணாக்கருக்கு முத்தைய வகுப்பில் படித்த எழுத்துகளையும் சேர்த்து எழுதவும், படிக்கவும், நினைவில் கொள்ளவும் பெரிதும் உதவும்.

இவ்வாறு ஒவ்வொரு வாரமும் வரைதல் மற்றும் எழுத்துப்பயிற்சியை (பாடத்திட்டபடி) 20 நிமிடம் பயிற்சிக் கொடுக்கலாம்.


பாடம் - 4 உயிர் எழுத்துகள்

அ ஆ

அன்னம் ஆகாயம்


இ ஈ

இந்தியா ஈச்சமரம்

உ ஊ

உறக்கம் ஊதுவத்தி

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) - நிலை ஒன்று பாடங்கள் 20


பாடம் - 2

எழுதிப் பழகுக

இ இ இ இ இ இ இ

இ இ இ இ இ இ இ

இ இ இ இ இ இ இ

இ இ இ இ இ இ இ

இ இ இ இ இ இ இ

இ இ இ இ இ இ இ

இ ..............................................................

இ ..............................................................

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) - நிலை ஒன்று பாடங்கள் 10

## விளையாட்டுக்கள் வழியாக.....

உ





ஊ

## காட்சி அட்டைகள் காண்பித்து........



அ



ஆ



இ

# எழுதும் விதம்

அ



அணில்

ஆ



ஆறு

# எழுதும் விதம்

| | | | | |
|---|---|---|---|---|
| க் | க் | க் | க் | க் |
| | | | | |
| | | | | |
| | | | | |
| ங் | ங் | ங் | ங் | ங் |
| | | | | |

பாடல்களை கற்பிக்கும் முறைகள்:

- பாடதிட்டத்தில் கொடுக்கப்பட்ட பாடல்களுக்கு ஒலி மற்றும் ஒளி நாடா இருப்பின் அதனை பயன்படுத்தலாம்.
- பாடல் வரிக்கு ஏற்ற செய்கையைச் செய்து காட்டி, அதனை திரும்ப செய்ய எடுத்துரைக்கலாம்.
- பாடலில் கூறப்படும் பொருட்களை கொண்டு வந்து, அதனை மாணாக்கரிடம் காட்டி சொல்லிக் கொடுக்கலாம்.
- ஒவ்வொரு வாரம் கொடுக்கப்பட்ட பாடல்கள் மட்டுமின்றி அதற்கு முந்தைய வாரத்தில் கொடுத்துள்ள பாடல்களையும் சேர்த்து கற்றுத்தருவதன் மூலம், மாணாக்கர் எளிதில் அந்த பாடல்களை கற்றுக் கொள்ள உதவும்.
- செய்கையின் மூலம் கற்றுக் கொள்வதால் பாடல் வரிகள் நினைவில் இல்லாத தருணத்திலும், அவர்களால் பாடலை முழுவதும் உணர்ந்து பாடி நிறைவு செய்ய இயலும்.

**பாடம் - 4**

**கீழ்வரும் பாடலை மனப்பாடம் செய்யவும்.**

**யானை வருது...**

யானை வருது யானை வருது
பார்க்க வாருங்கோ,
அசைந்து அசைந்து நடந்து வருது
பார்க்க வாருங்கோ,
கழுத்து மணியை ஆட்டி வருது
பார்க்க வாருங்கோ,
காதைக் காதை அசைத்து வருது
பார்க்க வாருங்கோ,
நீண்ட தந்தத் தோடே வருது,
பார்க்க வாருங்கோ,
தும்பிக்கையை வீசி வருது
பார்க்க வாருங்கோ.

-அழ வள்ளியப்பா



ஆத்திசூடி:

- ஆத்திசூடியை படித்துக் காண்பித்து மாணவர்களை 3 முறை திரும்பக் கூற சொல்லலாம்.
- ஆத்திசூடியின் கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருளை எளிய தமிழில் விளக்கியும், ஆங்கிலத்தில் பொருள் கூறியும் சொல்லிக் கொடுக்காலாம்.
- ஒவ்வொரு வாரம் சொல்லிக் கொடுக்க்கும் ஆத்திசூடி மட்டுமின்றி அதற்கு முந்தைய வாரத்தில் கொடுத்துள்ள ஆத்திசூடிகளையும் சேர்த்து கற்றுத்தருவதன் மூலம், மாணாக்கர்கள் எளிதில் பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து ஆத்திசூடிகளையும் மனப்பாடம் செய்து விடுவார்கள்.

***பாடம் - 9***

**மனப்பாடப்பகுதி: ஆத்திசூடி**

**உடையது விளம்பேல்**
**ஊக்கமது கைவிடேல்**

**பொருள்**

**உடையது விளம்பேல்** : தற்பெருமை பேசாதே.
**ஊக்கமது கைவிடேல்** : ஊக்கத்தைக் கைவிடாதே.

சொல்லிப்பழகவும்:

சொல்லிப்பழகவும் பகுதியில் உள்ள எளிமையான வாக்கியங்களை மாணாக்கர்களுக்கு பொருளை எடுத்துக் கூறி தெளிவாகத் திரும்பத் திரும்ப உச்சரிக்க சொல்ல வேண்டும்.


## சொல்லிப் பழகவும்

வாக்கியங்களைத் தெளிவாக உச்சரிக்கப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

இங்கே வா
அங்கே போ
கீழே வை
மேலே பார்
கதவைத் திற
பெட்டியை மூடு
ஏணியில் ஏறு

தெரிந்து கொள்வோம்:

தெரிந்து கொள்வோம் பகுதியில் உள்ள சொற்களின் தமிழ் மற்றும் ஆங்கிலப் பொருளைக் கூறி சொல்ல வைக்கலாம். மேலும் அவற்றை ஒரு ஆங்கில வாக்கியத்திலும், தமிழ் வாக்கியத்திலும் அமைத்து அச்சொற்கள் எப்படி வாக்கியங்களில் எப்படி பயன்படுத்தப்படுகின்றன என்று கூறலாம்.



# கதை சொல்லும் விதம்

- மாணவர்களில் ஒருவரை அழைத்துக் கதையைக் கூற சொல்லுதல்
- மாணவர்கள் ஒவ்வொருவராக கதையை ஆரம்பித்து ஒரு வரியில் கூறுதல்



# கதை நேரம்

ஆசிரியர் கதையை சுவாரசியமாக சொல்லிக் கொடுத்தல்





பாடம் - 5

கரடியும் நண்பர்களும்

இரு நண்பர்கள் வெளியூருக்குச் செல்ல காட்டைக் கடக்கவேண்டியிருந்தது.

காட்டில் ஒரு பெரிய கரடி அவர்களுக்கு முன்னால் வந்துகொண்டிருந்தது.

கரடியைக் கண்டதும் ஒருவன் மரத்தில் ஏறி விட்டான். அடுத்தவனுக்கு மரம் ஏறத் தெரியாது. நண்பனின் உதவியும் கிடைக்க வில்லை.

உடனே கீழே படுத்து மூச்சை அடக்கிக் கொண்டு இருந்தான். கரடி அவன் இறந்து விட்டான் என்று நினைத்துப் போய்விட்டது.

மரத்தில் ஏறிய நண்பன் இறங்கி வந்து கரடி என்ன சொன்னது என்று கேட்டான்.

ஆபத்துக்கு உதவாத நண்பர்களை நம்பாதே என்று கரடி சொல்லிற்று என்றான்.

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் (ATA) - நிலை ஒன்று பாடங்கள் 26

படம் பார்த்துப் பெயர் கூறல்:

- படங்களின் பெயர்களைக் கூறி அதன் ஆங்கிலப் பெயரைக் கூறி சொல்லலாம்.
- படங்களின் பெயர்களைக் கூறி அந்தப் பொருளைக் காண்பித்து சொல்லிக் கொடுக்கலாம். மாணாக்கர்கள் அந்தப் பொருளை எங்கு பார்த்திருக்கிறார்கள், அதன் பயன் என்ன என கேள்விகள் கேட்டு அந்தப் பொருளின் பெயரை சொல்லிக் கொடுக்கலாம்.



- எழுத்துக்களின் மீள்பார்வை
- கேள்வியின் மூலம் பதில் கூறச் செய்யவும்
- கடந்த வாரம் படித்த கதை மற்றும் பாட்டு
- அனைத்து மாணாக்கருக்கும் சந்தர்ப்பம் தரவும்
- எழுத்து மற்றும் அதற்குரிய படங்களை வரைந்து பழகுதல்
- கடந்த வாரம் படித்த எழுத்துக்கள் ஒரு சிறிய மீள் பார்வை
- அந்த வாரத்திற்குரிய எழுத்துக்களின் ஒலியைக் கூறி எழுத செய்யவும்.
- பொருட்கள் கொண்டு சிறு விளையாட்டுக்கள் மூலம் கற்பிக்கலாம்.
- விலங்குகள் - கரடி ,சிங்கம், புலி, முதலிய உருவ பொம்மைகள் கொண்டும் விளையாடலாம்.
- கதை மற்றும் குழுவாக கற்றல்
- கடந்த வாரம் படித்த கதை மற்றும் குழுவாக கற்றல் பற்றி ஒரு சிறிய மீள்பார்வை.
- மாணாக்கரை குழுவாக பிரித்து நடித்துக் காட்ட செய்யலாம்.
- கதையில் வரும் கதாபாத்திரமாக நடித்து காட்டவும்.
- பொம்மைகள் கொண்டு கதை கூறலாம்.
- வட்டமாக நிற்க சொல்லவும். பாடல்களில் வரும் வரிக்கு எற்ற செய்கை செய்து ,மாணாக்கரையும் செய்து காட்ட

# வீட்டுப்பாடம்

### பெற்றோர் குறிப்பு

- முதல் நிலை பயிற்சி புத்தகங்களில் உள்ள வீட்டுப் பாடங்களை செய்ய பெற்றோர் உதவி தேவை. ஒரு சில பயிற்சிகள் மாணாக்கர்கள் தாமாகவே செய்யக்கூடியவையாகவும் அமைக்கப்பட்டுள்ளன
- பயிற்சிகளை செய்ய, கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பெற்றோர்கள் படித்துக் காண்பித்து விளக்குதல் அவசியம்.
- வீட்டில் தங்கள் குழந்தைகளுடன் தமிழில் பேசுவதும், அவர்கள் குடும்பத்தினருடன் தமிழில் பேசுவதை ஊக்கப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது.
- இந்த நிலையின் முடிவில் உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், பாடல்கள் மற்றும் கதைகளுடன் சுமார் 100 எளிய தமிழ் வார்த்தைகள் தெரிந்திருக்க வேண்டும்.

# பயிற்சிகள்

- படத்தைப் பார்த்து தொடங்கும் முதல் எழுத்தை வட்டமிடுக
- பொருத்துக
- எழுதிப் பழகுக
- எழுத்துகளை சுழித்தல்
- எழுத்துகளை சரியான வரிசையில் எழுதுக
- தொடரைப் பூர்த்தி செய்க
- காட்சிகளை வரிசைப்படுத்தவும்

நிலை ஒன்று புத்தகத்துக்கான

கருத்துக்கள்

கேள்விகள்

திருத்தங்கள்

மின்னஞ்சல்...nilai1@amtaac.org